ஸ்ரீ துர்க்கை சித்தர் அருளிய ராகு கால துர்க்கை அஷ்டகம்

ஸ்ரீ துர்க்கா சந்நதியில் ஏலுமிச்சை பழத்தில் நெய் விளக்கு ஏற்றி ஜெபிக்கவும்

செவ்வாய்க் கிழமை விரதம் இருந்து, ராகு காலத்தில் (பிற்பகல் 03–00 – 04–30 மணி) ஸ்ரீ துர்க்கைக்கு எலுமிச்சை பழத்தில் (பழமூடியில் குங்குமப் பொட்டு வைத்து) நெய் விளக்கு ஏற்றி கிழக்கு முகமாக அமர்ந்து அல்லது நின்று, இந்த ஸ்தோத்திரத்தை மனதுருகி பாரயணம் செய்து வந்தால், ராகு கேது தோஷம் நீங்கி சுபிக்ஷம் உண்டாகும். திருமணத் தடைகள் நீங்கும். வல்வினை சொல்லாமல் போகும். பிள்ளைப் பேறு உண்டாகும்,

## ஸ்ரீ துர்க்கை சித்தர் அருளிய
## ராகு கால துர்க்கை அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்குமானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!!

உலகையீன்றவள் துர்க்க உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே – தேவி

செம்மையானவள் துர்க்கா செபமு மானவள்
அம்மையானவள் அன்புத் தந்தையானவள்
இம்மையானவள் துர்க்கா இன்ப மானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே – தேவி

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே – தேவி

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்பத் தோணியானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே – தேவி

குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்காதிரு சூலியானவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே – தேவி

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்

ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே – தேவி

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே!
கருணை துர்க்கையே வீரக் ககன துர்க்கையே!
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே!
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே – தேவி.

--------------------------------------------